**15 வது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**

**ஜார்ஜ் டவுண், சென்னை-01.**

**முன்னிலை திரு. K. பாக்கியராஜ், பி.காம்., பி.எல்.,**

**15 வது பெருநகர குற்றவியல் நடுவர்/நீதித்துறை நடுவர்,**

**2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ம் நாள் புதன்கிழமை**

**C.C.No. 328/2024**

**CNR No: TNCHOB-000601-2024**

அரசுக்காக,

காவல் உதவி ஆய்வாளர்,

எச்.4 கொருக்குப்பேட்டை காவல் நிலையம்,

சென்னை-21.

குற்ற எண். 389/2022 ... குற்றமுறையீட்டாளர்

/ எதிர்/

சாருமதி, பெ/வ. 46,

க/பெ. முத்துபெருமாள், ... குற்றஞ்சாட்டப்பட்டவர்

| வரிசை எண் | விளக்கம் | விவரங்கள் | |
|---|---|---|---|
| 1. | சம்பவம் நடந்த நாள் | 19.10.2023 | |
| 2. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | 19.10.2023 | |
| 3. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | கைது செய்யப் பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | | காவல் நிலைய பிணையில் சென்றுள்ளார். |
| 4. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 22.03.2024 | |

<table>
<tr><td>5.</td><td>குற்றச்சாட்டு வனையப்பட்டு குற்றச்சாட்டு குறித்து வினவப்பட்ட நாள்</td><td colspan="3">10.06.2024</td></tr>
<tr><td>6.</td><td>கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்யப் பட்ட மனுக்ககை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள்</td><td colspan="3">C.M.P.No. 1232/2026–ல் தாக்கல் செய்த BNSS பிரிவு 348ன் கீழான மனு கடந்த 15.06.2026ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td rowspan="10"></td><td rowspan="10">வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>20.03.2025</td><td>01.07.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>20.03.2025</td><td>01.07.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>23.07.2025</td><td>23.07.2025</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>23.07.2025</td><td>23.07.2025</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>22.09.2025</td><td>22.09.2025</td></tr>
<tr><td>அ.சா.6</td><td>22.09.2025</td><td>22.09.2025</td></tr>
<tr><td>அ.சா.7</td><td>30.01.2026</td><td>30.01.2026</td></tr>
<tr><td>அ.சா.8</td><td>30.01.2026</td><td>30.01.2026</td></tr>
<tr><td>அ.சா.9</td><td>04.03.2026</td><td>04.03.2026</td></tr>
<tr><td>8.</td><td>எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய நாள்</td><td colspan="3">10.03.2026</td></tr>
<tr><td rowspan="2">9.</td><td rowspan="2">எதிரிகள் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள்</td><td colspan="2">பிடியாணை வழங்கப்பட்ட நாள்</td><td>பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள்</td></tr>
<tr><td colspan="2">இல்லை</td><td>இல்லை</td></tr>
<tr><td>10.</td><td>வழக்கு தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்ட நாள்</td><td colspan="3">27.07.2026</td></tr>
<tr><td>11.</td><td>தீர்ப்பு பகரப்பட்ட நாள்</td><td colspan="3">29.07.2026</td></tr>
</table>

இவ்வழக்கில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை 2 திருமதி.ஏ.

தமிழன்னை அவர்கள் ஆஜராகியும், குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் வழக்குரைஞர் திரு.S. சேவியர் விஜயன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பும் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இறுதியாக, இந்நீதிமன்றத்தின் முன் 29.07.2026–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்து இதுநாள் வரை பரிசீலனையிலிருந்து வந்து இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும்,

<u>தீர்ப்புரை</u>

இந்த வழக்கு குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 173 (2) இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையின் படிக்கு எழுந்த வழக்காகும்.

<u>1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :</u>

கடந்த 19.10.2023ம் தேதி காலை 10.30 மணிக்கு எச்.4 கொருக்குப்பேட்டை காவல்நிலைய எல்லைக்குட்பட்ட எண். 12–C/34 R.K நகர் 1வது தெரு, கொருக்குப்பேட்டை, சென்னை–21 என்ற விலாசத்தில் உள்ள வீட்டின்முன்பு வைத்து சாட்சி–1ஐ எதிரி அசிங்கமாக பேசி அங்கு கிடந்த கல்லை எடுத்து வாதியின் முகத்தில் அடித்து காயம் ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(பி), 324 ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக எச்.4 கொருக்குப்பேட்டை காவல் உதவி ஆய்வாளரால் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. குற்ற அறிக்கை மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்களையும் குற்ற அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களையும் பரிசீலனை செய்து

பார்த்ததில் எதிரிக்கு எதிராக புலன் கொள்ளக்கூடிய குற்றங்கள் விசாரணைக்கு எடுக்க முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 294(பி), 324 ன் படியான குற்றங்களையும் விசாரணைக்கு எடுத்து குற்ற விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 190 (1) (b)–ன் படி உத்தரவிடப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. குற்றஞ்சாட்டப்பட்டவர் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழக்கில் உள்ள ஆவணங்களின் நகல்கள் யாவும் பிரிவு 207 குற்ற விசாரணை நடைமுறை சட்டத்தின் படி இலவசமாக வழங்கப்பட்டன.

4. எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 294(பி), 324–ன் கீழான குற்றங்களைப் பற்றி, குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 240(1)–ன் படி குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு விளக்கிக்கூறி, வினவியபோது குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றசாட்டுகளை மறுத்த காரணத்தினால் அரசு தரப்பில் சாட்சிகளை விசாரிக்க உத்தரவிடப்பட்டது.

5. அரசு தரப்பில் அ.சா.1 முதல் 9 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் எதுவும் இல்லை.

**அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்:**

6. அரசு தரப்பு சாட்சிகளில் அ.சா.1 முத்துபெருமாள் பாதிக்கப்பட்ட நபர் மற்றும்

புகார்தாரர் ஆவார். அ.சா.1 தன்னுடைய சாட்சியத்தில் 24.05.1999 அன்று ஆஜர் எதிரியுடன் திருமணம் ஆனது எனவும், திருமணமான அன்று முதலிருந்தே தனக்கும், அவருக்கு பிரச்சினை இருந்து வந்ததாகவும், 2012ம் வருடத்தில் குடும்ப நல நீதிமன்றத்தில் தான் விவாகரத்து வழக்கு தொடர்ந்ததாகவும், 2012ல் தான் வழக்கு தொடர்ந்த பிறகு தானும், தன் இரண்டு மகன்களும், தனியாக வாழ்ந்து வருகிறதாகவும், எதிரி தனியாக வசித்து வருகிறதாகவும், ஒரே கட்டடத்தில் முதல் தளத்தில் ஒரு போசனில் தானும், தன் மகன்களும், மற்றொரு போசனில் ஆஜர் எதிரியும் வசித்து வருகிறதாகவும், அது தன்னுடைய சொந்த வீடு வழக்கமாக ஆஜர் எதிரி வீட்டின் ஜன்னல் அருகில் நின்றுக்கொண்டோ பட்டறையின் வாசலில் நின்றுகொண்டோ தன்னை அசிங்கமாக பேசுவார் எனவும், தேவிடியாமகனே, நாய்க்கு பிறந்தவனே என திட்டுவார் எனவும், தன் மகன்களுக்காக தான் பொருத்துக்கொண்டதாகவும், குடும்ப நல நீதிமன்றத்தின் வழக்கு தற்போது நிலுவையில் உள்ளதாகவும், கடந்த 19.10.2023ம் தேதி காலை 10.00 மணியளவில், தான் வீட்டில் இருந்து கீழே இறங்கும் போது தன் பின்னாலே ஆஜர் எதிரி மேற்சொன்ன வார்த்தையால் திட்டிக்கொண்டே, பணம் கேட்டு பின்னால் வந்தார். தன் வீட்டிற்கு போர் போட்டுக்கொண்டிருந்தவர்களிடம் பேசிக்கொண்டிருந்தபோது தன் மனைவி தன்னை தகாத வார்த்தையால் பேசிக்கொண்டே கல்லால் இடது பக்க கன்னத்தில் அடித்ததாகவும், அதில் தனக்கு இடது பக்க கன்னத்தில் காயம் ஏற்பட்டதாகவும், அருகிலுள்ள தனியார் மருத்துவமனைக்கு சென்று சிசிக்சை பெற்றதாகவும், தன்னை மருத்துவமனைக்கு நாகேந்திரன் என்பவர் அழைத்துச்சென்றதாகவும், நேரம் ஆக ஆக தன்னுடைய இடது கன்னம் வீங்க வழி ஏற்பட்டதால் அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு சென்று 7

நாட்கள் சிகிச்சை பெற்றதாகவும், மருத்துவமனையிலிருந்து காவல்நிலையத்திற்கு தகவல் கொடுத்ததால் காவலர்கள் அங்கு வந்து தன்னிடம் வாக்குமூலம் பெற்றுச்சென்றதாகவும், புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் எனவும், தான் சொல்ல சொல்ல காவலர்கள் எழுதினார்கள் எனவும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 மூலமாக அதசாஆ.1 புகார் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7. அ.சா.2 நகேந்திரன் கண்ணுற்ற சாட்சி ஆவார். அ.சா.2 தன்னுடைய சாட்சியத்தில் 19.10.2023 ம் தேதி தான் காலை 10.30 மணியளிவல் ஸ்டீல் பட்டறையில் பணி செய்துக்கொண்டிருந்தபோது முதல் மாடியில் ஆஜர் எதிரி கத்திக்கொண்டு இருந்ததாகவும், எப்படி கத்திக்கொண்டு இருந்தார் என்றால் தங்கள் உரிமையாளரை திட்டிக்கொண்டு இருந்ததாகவும், அந்த வார்தைகள் சொல்ல முடியாத வார்த்தைகள் எனவும், தன்னுடைய உரிமையாளர் கீழே வந்து தெருவிலுள்ள ஆட்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி கல்லை வைத்து இடது கன்னத்தில் அடித்துவிட்டதாகவும், தான் அவரை அருகிலுள்ள தனியார் மருத்துவரிடம் அழைத்து சென்றதாகவும், அங்கு முதலுதவி செய்து அனுப்பிவிட்டதாகவும், மதியம் 2.30 மணியளவில் உரிமையாளர் பட்டறையில் இருந்தபோது அவருக்கு இடது கன்னம் வீங்கி வலி அதிகமாகி கண் பார்வை மங்கலாக தெரிவதாக சொன்னதால் தான் அவரை அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாகவும், தான் தன் உரிமையாளரை மருத்துவமனையில் சேர்த்துவிட்டு வந்துவிட்டதாகவும், தான் இருக்கும் போது போலீசார் வந்து தன் உரிமையாளரையும், தன்னையும் விசாரித்து சென்றதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

8. அ.சா.3 கர்ணன் கண்ணுற்ற சாட்சி ஆவார். அ.சா.3 தன்னுடைய சாட்சியத்தில் கடந்த 19.10.2023ம் தேதி காலை 10.30 மணிக்கு தாங்கள் பட்டறை அருகே ப்ளம்பிங்க வேலை செய்து கொண்டிருந்ததாகவும், தன்னுடன் நாராயணன் மற்றும் பிரபுவும் வேலை செய்து கொண்டிருந்ததாகவும், ஆஜர் எதிரி வீட்டில் இருந்து அசிங்கமாக பேசிக் கொண்டே கீழே இறங்கி வந்து கல்லை எடுத்து முத்துப் பெருமாளை அடித்துவிட்டதாகவும், அவரது இடது பக்க கன்னத்தில் காயம் ஏற்பட்டதாகவும், முத்துப் பெருமாளை நாகேந்திரன் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், சிகிச்சை முடித்த விட்டு இருவரும் வந்ததாகவும், சிறிது நேரம் கழித்து முத்துப் பெருமாள் தனக்கு வலி இருப்பதாக சொன்ன உடன் மறுபடியும் அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

9. அ.சா.4 பிரபு கண்ணுற்ற சாட்சி ஆவார். அ.சா.4 தன்னுடைய சாட்சியத்தில் 19.10.2023ம் தேதி ஆர்.கே.நகர் 1வது தெருவில் இருக்கும் முத்துப் பெருமாளின் வீட்டு வாசலில் வேலை செய்து கொண்டிருந்ததாகவும், தன்னுடைய மேஸ்திரி கர்ணாவும், நாராயணனும் வேலை செய்து கொண்டிருந்ததாகவும், எதிரி வீட்டில் இருந்து அசிங்க பேசிக் கொண்டே கீழே இறங்கி வந்ததாகவும், அப்போது தானும் கர்ணாவும் சத்தம் போடாதிங்க வேலை செய்ற இடம் என்று சொன்னதாகவும், அவர்கள் அதை காதில் வாங்காமல் கல்லை எடுத்து முத்துப் பெருமாளை அடித்துவிட்டதாகவும், அவரது இடது பக்க கன்னத்தில் காயம் ஏற்பட்டதாகவும், முத்துப் பெருமாளை நாகேந்திரன் தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், சிகிச்சை முடித்து விட்டு வந்து மேலே அவர் வீட்டிற்கு வந்து ரெஸ்ட் எடுத்ததாகவும், வந்து 15.00 நிமிடம்

கழித்து தனக்கு அதிக வலி இருப்பதாக சொன்ன உடன் மறுபடியும் நாகேந்தரின் அவரை அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

10. அ.சா.5 கோதண்டராமன் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆவார். அ.சா.5 தன்னுடைய சாட்சியத்தில் 2003 ம் வருடம் இரவு 8.30/9 மணியளவில் தான் பட்டறையில் வேலையை முடித்துவிட்டு தானும் பாலும் பட்டறையில் இருந்து வெளியே வந்ததாகவும், அப்போது போலிசார் முத்துப்பெருமாள் மற்றும் அவர் மனைவிக்கு சண்டை நடந்தது தொடர்பாக படம் வரைந்ததாகவும், அதற்கு சாட்சியாக தன்னையும் பாலுவையும் கையெழுத்து போடச் சொன்னதாகவும், போலிசார் சம்பவ இடத்தில் இருந்து கல்லை எடுத்து சென்றதாகவும், எடுத்து சென்ற கல்லை தான் பார்த்ததாகவும், கல் தான் போலிசார் எடுத்து சென்ற கல் எனவும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.5 மூலமாக அதசாஆ.2,3 மற்றும் சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

11. அ.சா.6 பாலு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆவார். அ.சா.6 தன்னுடைய சாட்சியத்தில் 23.10.2003 ம் தேதி இரவு 9.00 மணியளவில் தான் பட்டறையில் வேலையை முடித்துவிட்டு தானும் அசா.5–ம் பட்டறையில் இருந்து வெளியே வந்ததாகவும், அப்போது போலிசார் முத்துப் பெருமாள் மற்றும் அவர் மனைவிக்கு சண்டை நடந்தது தொடர்பாக படம் வரைந்தார்கள் எனவும், அதற்கு சாட்சியாக தன்னையும் கோதண்டராமனையும் கையெழுத்து போடச்

சொன்னதாகவும், மேலும் சம்பவ இடத்தில் இருந்த கல்லை எடுத்து சென்றதாகவும், அதற்கும் தான் சாட்சி கையெழுத்து போட்டதாகவும், போலிசார் எடுத்து சென்ற கல்லை தான் பார்த்தாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

12. அ.சா.7 வீரலட்சுமி மருத்துவர் ஆவார். அ.சா.7 தன்னுடைய சாட்சியத்தில் கடந்த 19.10.2023 ம் தேதி அரசு ஸ்டான்லி மருத்துவமனையின் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக பணியில் இருந்த போது மதியம் 2.45 மணியளவில் 53 வயதுடைய முத்துபெருமாள் என்பவரை அவருடன் வேலை செய்யும் நாகேந்திரன் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்ததாகவும், காயம் பெற்ற நபரை விசாரித்த போது அவர் தன்னை அடையாளம் தெரிந்த ஒரு நபர் காலை 10.30 மணியளவில் அவர் வசித்து வரும் வீட்டின் அருகே கல் கொண்டு தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்த போது அவர் சுயநினைவுடன் காணப்பட்டார். உடல்நிலை சீராக இருந்தது. இடது கன்னத்தின் உட்புறத்தில் சிறிய அளவில் சிறிய காயம் காணப்பட்டது. நான் அவருக்கு முதல் உதவி அளித்து மேல்சிகிச்சைக்கு பரிந்துரை செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.7 மூலமாக அதசாஆ.4 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

13. அ.சா.8 ஸ்ரீவித்யா மருத்துவர் ஆவார். அ.சா.8 தன்னுடைய சாட்சியத்தில் கடந்த 19.10.2023 ம் தேதி, மதியம் 3.30 மணியளவில் தான் பணியில் இருந்த போது முத்துபெருமாள் என்பவர் தன்னை அன்றைய தினம் காலை 10.30 மணியளவில் தெரிந்த நபர் ஒருவர் கல்லால் அடித்து தாக்கியதாக கூறியதாகவும், அவர் தன்னிடம் வருவதற்கு முன்பு அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவர் வீரலட்சுமி என்பவரால்

முதலுதவி கொடுக்கப்பட்டு உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டதாகவும், தான் அவரை பரிசோதனை செய்த போது நாடி, இரத்த அழுத்தம் ஆகியவை சாதாரண நிலையில் இருந்ததாகவும், அவருடைய முகத்தில் இடது கண் கீழ பகுதியில் வீக்கம் காணப்பட்டதாகவும், இடது பக்க கன்னத்தின் உட்புறமாக வாயின் உட்பகுதியில் சிறிய 0.5 x 0.5 x 0.3 cm கிழிந்த காயம் காணப்பட்டதாகவும், மேலும் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு முகத்திற்காக சிடி ஸ்கேன் செய்யப்பட்டு எலும்பு முறிவு சிகிச்சை மற்றும் கண் சிகிச்சை நிபுணர் ஆகியோர் கருத்துரை பெறப்பட்டு அதன் அடிப்படையில் அவருக்கு எலும்பு முறிவு ஏற்படவில்லை என கண்டறியப்பட்டதாகவும், மேலும் அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என சான்று வழங்கியதாகவும், அவர் 25.10.2023 ம் தேதி மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.8 மூலமாக அதசாஆ.5 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

14. அ.சா.9 பழனிசாமி உதவி ஆய்வாளர் ஆவார். அ.சா.9 தன்னுடைய சாட்சியத்தில் கடந்த 19.10.2023 ம் தேதி எச்–4 கொருக்குப்பேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றிய போது அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலினை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த முத்துப் பெருமாள் என்பவரை விசாரித்து அவர் கொடுத்த புகாரை வாக்குமூலமாக பதிவு செய்து நிலையம் வந்து நிலைய குற்ற எண். 190/2023 சட்ட பிரிவுகள் 294(பி), 324 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், பின்னர் அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் கோதண்டராமன் மற்றும் பாலு ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும்

மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், சம்பவ இடத்தில் இருந்து அடையாளம்காட்டி எடுத்து ஆஜர் செய்த கல் ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றியதாகவும், எதிரியை தேடி வந்த நிலையில் 09.11.2023 ம் தேதி காவல் நிலையத்திற்கு அழைப்பின் பேரில் வந்த எதிரியை நிலையத்தில் வைத்து கைது செய்து அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் பெண் காவலர் தேவிகா மற்றும் ரவி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து நிலைய பிணையில் விடுவித்ததாகவும், பின்னர் புகார்தாரருக்கு முதல் உதவி சிகிச்சை அளித்த மருத்துவர் வீரலட்சுமி என்பவரையும் புகார்தருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என சான்று வழங்கிய மருத்துவர் ஸ்ரீவித்யா என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர்களிடம் இருந்து விபத்து பதிவேடு நகல் மற்றும் காயச்சான்றினை பெற்றதாகவும், விசாரணை முடித்து எதிரி மீது சட்ட பிரிவுகள் சட்ட பிரிவுகள் 294(பி), 324 இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.9 மூலமாக அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டது.

15. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள பகுதியை குற்ற விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 313(1)(பி)–ன் கீழ் விளக்கி வினவ குற்றஞ்சாட்டப்பட்டவர் சாட்சிகளின் சாட்சியங்களை பொய் சாட்சி மற்றும் பொய் வழக்கு என்றும் எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை எனக் குறிப்பிட்டுள்ளார். எனவே, எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு இருதரப்பும் கேட்கப்பட்டது.

16. தீர்வுக்குரிய பிரச்சனை :

இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 294(பி), 324–ன் படியான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் எந்தவொரு சந்தேகத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்மானிக்க வேண்டிய பிரச்சனையாகும்.

17. அரசு தரப்பு வழக்கானது கடந்த 19.10.2023ம் தேதி காலை 10.30 மணிக்கு எச்.4 கொருக்குப்பேட்டை காவல்நிலைய எல்லைக்குட்பட்ட எண். 12–C/34 R.K நகர் 1வது தெரு, கொருக்குப்பேட்டை, சென்னை–21 என்ற விலாசத்தில் உள்ள வீட்டின்முன்பு வைத்து சாட்சி–1ஐ எதிரி அசிங்கமாக பேசி அங்கு கிடந்த கல்லை எடுத்து வாதியின் முகத்தில் அடித்து காயம் ஏற்படுத்தியதாக கொடுத்த அ.சா.ஆ.1 புகாரை உதவி ஆய்வாளர் திரு.பழனிசாமி பெற்று நிலைய குற்ற எண் 190/2023 சட்டப்பிரிவுகள் 294(பி), 324 ன் கீழ் அ.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், திரு.கோதண்டராமன் மற்றும் திரு.பாலு ஆகிய சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.7 மாதிரிவரைபடம் தயார் செய்தும், அதசாஆ.3 கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து படிவம் 91 மூலம் சா.பொ.1 கல்லை ஒப்படைத்தும், தனது புலன்விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேற்படி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரியின் மீதான குற்றசாட்டுகள் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாக கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார்.

18. எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றசாட்டுகள் நியாயமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், சம்பவம் நடந்ததாக கூறும் அன்று அ.சா.1 சாட்சி காலையில் மது அருந்திவிட்டு முதல் மாடிக்கு சென்று அங்கிருந்த எதிரியை தாக்கிவிட்டு முதல் மாடியில் இருந்து தரை தளத்திற்கு இறங்கி வரும் போது தடுமாறி கீழே விழுந்ததில் அவருக்கு மேற்படி காயம் ஏற்பட்டது என்றும், எதிரி அ.சா.1 ஐ தாக்கவில்லை என்றும், அ.சா.1 தாக்கியதால் தான் எதிரிக்கு காயம் ஏற்பட்டு அதற்கு அவர் அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றும், எதிரி மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்ற விவரம் காவல் துறையினருக்கு பகல் 12.15 மணிக்கு தெரிவிக்கப்பட்டதாலும், அதனை தொடர்ந்து காவல் உதவி ஆய்வாளர் திரு. பழனிசாமி எதிரியை மருத்துவமனையில் பார்த்து அவரை வீட்டிற்கு செல்லுமாறு அனுப்பிவிட்டு அந்த விவரத்தை அ.சா.1 க்கு சொன்னதாகவும், அதனை பிறகு தான் அ.சா.1 தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றும், பகல் 2.50 மணிக்கு அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்ததாகவும், எதிரி மீதுள்ள வெறுப்பின் காரணமாக அதசாஆ.1 புகாரினை அ.சா.1 கொடுத்துள்ளார் என்றும், எனவே, எதிரிக்கு சந்தேகத்தின் பலனை வழங்கி விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

19. எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை நிரூபிக்க இவ்வழக்கில் அ.சா.1 முதல் 9 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். இவ்வழக்கின் சம்பவத்தினால் பாதிக்கப்பட்டவரும் புகார்தாரரான அ.சா.1 முத்துபெருமாள் தன்னுடைய முதல் விசாரணையில் எதிரி தனது

மனைவி என்றும், கடந்த 24.05.1999 அன்று எதிரியுடன் திருமணம் நடந்தது என்றும், திருமணான அன்று முதலில் இருந்தே அ.சா.1 க்கும், எதிரிக்கு பிரச்சினை இருந்து வந்ததால் அதனால் 2015 ம் வருடத்தில் குடும்ப நல நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு தொடர்ந்து அது முதல் தனது இரண்டு மகன்களுடன் தனியாக வாழ்ந்து கொள்வதாகவும், எதிரி தனியாக வசித்து வருவதாகவும், முதல் தளத்தில் ஒரு பகுதியில் தானும், தனது மகன்களும், மற்றொரு பகுதியில் ஆஜர் எதிரியும் வசித்து வருவதாகவும், அது தனது சொந்த வீடு என்றும் கூறியுள்ளார். இது சம்மந்தமாக எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையின் பொழுதோ அல்லது எதிர் வாதத்தின் பொழுதோ எந்த ஆட்சேபணை தெரிவிக்கப்படவில்லை. எனவே, மேற்படி சங்கதிகள் உண்மை என்று தெரியவருகிறது. இதன் மூலம் அ.சா.1 க்கும், எதிரிக்கும், குடும்ப பிரச்சினை சம்மந்தமாக முன் விரோதம் உள்ளது என்பது நிரூபனமாகிறது.

20. அ.சா.1 தனது சாட்சியத்தில் கடந்த 19.10.2023 ம் தேதி காலை 10.00 மணியளவில் வீட்டிலிருந்து கீழே இறங்கும் போது தன் பின்னாலே எதிரி ஆபாசமான கெட்டவார்த்தையால் திட்டிக்கொண்டே பணம் கேட்டு பின்னால் வந்து வீட்டிற்கு ஆழ்துளை கிணறு போட்டுக்கொண்டிருந்தவரிடம் பேசிக்கொண்டிருந்தபோது எதிரி கல்லால் இடது பக்க கன்னத்தில் அடித்ததாகவும், அதில் அ.சா.1 க்கு இடது பக்க கன்னத்தில் காயம் ஏற்பட்டதாகவும், அதற்கு அருகிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகவும், பிறகு அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகவும், காவல் துறையினர் அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு வந்து அதசாஆ.1 புகார் வாக்குமூலம் பெற்று

சென்றதாகவும் கூறியுள்ளார். மேலும், இதனை உறுதிப்படுத்தும் வகையில் குறுக்கு விசாரணையில் எதிரி கொஞ்ச தூரத்தில் இருந்துக்கொண்டு தன்னை தாக்கினார் என்றும், அவர் தாக்கியவுடன் தான் மயக்கமுற்றதாகவும் கூறியுள்ளார். அ.சா.1ன் சாட்சியத்தின் நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்கும் வகையில் அவருடைய குறுக்கு விசாரணையில் எந்த வித சங்கதியும் இல்லை. அ.சா.1ன் சாட்சி அதசாஆ.1 புகார் வாக்குமூலத்தை அனுசரித்தும் உள்ளது. எனவே, அ.சா.1ன் சாட்சியம் நம்பத்தகுந்த சாட்சியமாக ஏற்கப்படுகிறது.

21. இவ்வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும், அ.சா.1ஐ மருத்துவமனையில் சேர்த்தது பற்றி அ.சா.2 சாட்சியம் அளித்துள்ளார். இவரும் தன்னுடைய சாட்சியத்தில் சம்பவத்தின் போது ஸ்டீல் பட்டறையில் பணி செய்துக்கொண்டிருந்தபோது எதிரி முதல் மாடியில் இருந்துக்கொண்டு கத்தியவாறு இருந்ததாகவும், ஆபாச வார்த்தைகளால் திட்டியதாகவும், தனது உரிமையாளரான அ.சா.1 கீழே வந்து தெருவிலுள்ள ஆட்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது எதிரி கல்லை வைத்து அ.சா.1ன் இடது கன்னத்தில் அடித்துவிட்டதாகவும், அவரை அருகிலுள்ள திரு. ஜனார்த்தனன் தனியார் மருத்துவரிடம் முதல் உதவி சிகிச்சைக்கும், மேற்படி காயம் சரியாகததால் அன்றைய தினமே அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்ததாகவும் கூறியுள்ளார். இவருடைய சாட்சியத்தின் நம்பகத்தன்மை கேள்விக்குட்படுத்தும் வகையில் எந்த சங்கதியும் அவரது குறுக்கு விசாரணையில் இல்லை. அ.சா.3 கர்ணன் அ.சா.4 பிரபு ஆகியோரும் தங்களுடைய சாட்சியத்தில் அ.சா.1 சாட்சியை அ.சா.2 நாகேந்திரன் தனியார் மருத்துமவனைக்கு

அழைத்து சென்றதாகவும் கூறியுள்ளனர். எனவே, அ.சா.2 ன் சாட்சியமும் நம்பத்தகுந்த சாட்சியமாக ஏற்க இயலாது.

22. சம்பவத்தன்று அ.சா.1 ன் வீட்டில் பிளம்பிக் வேலை செய்த அ.சா.3 கர்ணன் அ.சா.4 பிரபு ஆகியோரும் தங்களுடைய சாட்சியத்தில் அ.சா.1 ன் மனைவியான எதிரி சம்பவத்தன்று அசிங்கமான வார்த்தைகளால் பேசிக்கொண்டே கீழே இறங்கி வந்து கல்லை எடுத்து முத்துபெருமாளை அடித்துவிட்டதாகவும், அதனால் அவரது இடது கன்னத்தில் காயம் ஏற்பட்டதாகவும், அவரை அ.சா.2 நாகேந்திரன் தனியார் மருத்துமவனைக்கு அழைத்து சென்றதாகவும் கூறியுள்ளனர். இவர்களுடைய சாட்சியத்தை கேள்விக்குள்ளாக்கும் வகையில் எவ்வித சங்கதிகளும் அவருடைய குறுக்கு விசாரணையில் இல்லாததால் மேற்படி சாட்சியங்கள் நம்பத்தகுந்த சாட்சியங்களாக ஏற்கப்படுகிறது.

23. மேலே விவாதிக்கப்பட்டதிலிருந்து கடந்த 19.10.2023 ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் அ.சா.1 ஐ அவரது மனைவி வீட்டில் வைத்து அசிங்கமான வார்த்தைகள் கூறி திட்டியும், வீட்டிற்கு வெளியே வைத்து கல்லால் தாக்கியுள்ளார் என்பது நிரூபனமாகியுள்ளது தெரிய வருகிறது. அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் அ.சா.7 வீரலட்சுமி , அ.சா.8 ஸ்ரீவித்யா ஆகியோரின் சாட்சியத்திலிருந்து கடந்த 19.10.2023 ம் தேதி மதியம் 2.50 மணியளவில் அ.சா.1 சாட்சியை அ.சா.2 சாட்சி சிகிச்சைக்காக சேர்த்துள்ளார் என்பதும், அவரை விசாரித்த போது அ.சா.1 மருத்துவரிடம் தன்னை அடையாளம் தெரிந்த ஒரு நபர் காலை 10.30 மணியளவில் அவர் வசித்து

வீட்டின் அருகே வைத்து கல் கொண்டு தாக்கியதாக கூறியுள்ளார் என்பதும், அவரை பரிசோதனை செய்த போது அவருக்கு இடது கன்னத்தின் உட்புறத்தில் 0.5 x 0.5x 0.3 சொ.மீ அளவுள்ள கிழிந்த காயம் இருந்துள்ளது என்பதும், அந்த காயம் சொற்பகாயம் என அ.தசாஆ.5 காயச்சான்று வழங்கியுள்ளதும் நிரூபனமாகியுள்ளது. இதன்மூலம் அ.சா.1 யை எதிரி கல்லை கொண்டு தாக்கியதில் தான் மேற்படி காயம் ஏற்பட்டுள்ளது என்பது நிரூபணமாகியுள்ளது.

24. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.9 திரு. பழனிசாமி காவல் உதவி ஆய்வாளர் சம்பவத்தை பற்றி தகவல் கிடைத்த அன்றே அதசாஆ-6 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அதனை தொடர்ந்து அன்றைய தினமே சம்பவயிடம் சென்று சாட்சிகள் அ.சா.5 கோதண்டராமன் அ.சா.6 பாலு ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அதசாஆ-2 பார்வை மகஜர் அதசாஆ.7 மாதிரி வரைபடம் ஆகியவற்றை தயார் செய்துள்ளார் என்பதும், அதனை தொடர்ந்து சம்பவயிடத்திலிருந்து சா.பொ.1 கல்லை மேற்படி சாட்சிகள் முன்னிலயைில் அதசாஆ.3 கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியுள்ளார் என்பதும், மேற்படி சாட்சிகள் மூலம் நிரூபனமாகியுள்ளது. அ.சா.6 தனது சாட்சியத்தில் சா.பொ.1 கல்லை கொண்டுதான் எதிரி அ.சா.1 சாட்சியை தாக்கியதாக கூறியுள்ளார். எனவே, சா.பொ.1 கல்லை கொண்டு எதிரி அ.சா.1 சாட்சியை தாக்கியுள்ளார் என்பது நிரூபணமாகியுள்ளது. அ.சா.9 இவ்வழக்கினை எவ்வத காலதாமதமுமின்றி பதிவு செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். இது மேலும் அரசு தரப்பு வழக்கினை வலுப்படுத்தும் வகையில் உள்ளது.

25. எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்து வழக்கறிஞர் சம்பவம் நடந்ததாக

கூறும் அன்று அ.சா.1 சாட்சி காலையில் மது அருந்திவிட்டு முதல் மாடிக்கு சென்று அங்கிருந்த எதிரியை தாக்கிவிட்டு முதல் மாடியில் இருந்து தரை தளத்திற்கு இறங்கி வரும் போது தடுமாறி கீழே விழுந்ததில் அவருக்கு மேற்படி காயம் ஏற்பட்டது என்றும், எதிரி அ.சா.1 ஐ தாக்கவில்லை என்றும், அ.சா.1 தாக்கியதால் தான் எதிரிக்கு காயம் ஏற்பட்டு அதற்கு அவர் அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றும், எதிரி மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்ற விவரம் காவல் துறையினருக்கு பகல் 12.15 மணிக்கு தெரிவிக்கப்பட்டதால் அதனை தொடர்ந்து காவல் உதவி ஆய்வாளர் திரு. பழனிசாமி எதிரியை மருத்துவமனையில் பார்த்து அவரை வீட்டிற்கு செல்லுமாறு அனுப்பிவிட்டு அந்த விவரத்தை அ.சா.1 க்கு சொன்னதாகவும், அதனை பிறகு தான் அ.சா.1 தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றும், பகல் 2.50 மணிக்கு அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்ததாகவும், எதிரி மீதுள்ள வெறுப்பின் காரணமாக அதசாஆ.1 புகாரினை அ.சா.1 கொடுத்துள்ளார் என்று கூறியுள்ளார். இதிலிருந்து எதிரிக்கும், அ.சா.1 க்கும், கடந்த 19.10.2023 ம் தேதி அன்று காலை 10.00 மணியளவில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்பதே எதிரி ஒப்புக்கொண்டுள்ளார். அ.சா.1 ஐ எதிரி தாக்கினார் என்பதற்கு அரசு தரப்பில் மேற்சொன்ன சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் எதிரி தரப்பில் கூறுவது போல் அ.சா.1 தான் எதிரியை தாக்கினார் என்பதற்கு எந்தவித சான்றாவணங்களும், சாட்சியங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேற்படி சங்கதிகளை நிரூபனம் செய்யவேண்டிய பொறுப்பு எதிரிக்கு இருந்தும், அதனை நிரூபனம் செய்யாததால் எதிரி தரப்பில் கூறும் மேற்படி வாதத்தை ஏற்க இயலாது. எனவே, எதிரியின் மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவு 324 ன்

கீழான குற்றச்சாட்டு நியாயமான சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிரூபனம் செய்யப்பட்டுள்ளது என முடிவு செய்கிறது. அதேசமயம் எதிரி அ.சா.1 ஐ வீட்டில் வைத்து கெட்ட வார்த்தைகள் கூறி திட்டினார் என்பது தெரியவருவதால் இதச பிரிவு 294(பி)ன் கீழான குற்றத்திற்கு தேவையான அடிப்படை கூறான பொது இடத்திலோ, அதற்கு அருகிலோ வைத்து அ.சா.1 யை எதிரி ஆபாச வார்த்தைகளை கூறி திட்டவில்லை என்பதால் அதனை பொறுத்து எதிரியை தண்டிக்க இயலாது என்பதால் எதிரியை மேற்படி குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்வதென என முடிவு செய்கிறது.

26. எதிரி மேற்கண்ட பிரிவின் படிக்கு குற்றவாளி என தீர்மானிக்கப்பட்டுள்ளதால் எதிரியிடம் தண்டனை குறித்து வினவிய போது குறைந்தபட்ச தண்டனை வழங்குமாறு கேட்டுக்கொண்டார். எதிரிக்கு எதிராக முன்வழக்கு எதுவும் இல்லாததாலும், முதல் குற்றவாளி என்பதாலும், எதிரியின் வேண்டுகோளை ஏற்று அவருக்கு குறைந்த பட்ச தண்டனையாக அபராத தொகை மட்டும் விதித்து தண்டிப்பது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

27. எதிரியின் மேற்கண்ட பதில்களை பரிசீலனை செய்த வகையிலும், வழக்கின் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும், எதிரிக்கு இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 324 ன் கீழான குற்றத்திற்கு ரூ.10,000/-, அபராதம் மட்டும் விதித்து அதனை அவர் செலுத்ததவறினால் ஒரு மாதம் மெய்க்காவல் சிறை தண்டனையும் விதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

28. எதிரி பொது இடத்தில் வைத்து அ.சா.1 க்கு துன்பம் விளைவித்துள்ளதால் அதனை ஈடு செய்யும் வகையில் கு.வி.மு.ச. பிரிவு 357 ன் கீழ் இழப்பீடு வழங்கலாம் என தீர்மானிக்கிறது. அதன் படிக்கு எதிரி செலுத்தும் தண்டனை தொகையிலிருந்து ரூ.5,000/–த்தை அ.சா.1 க்கு இழப்பீடாக வழங்க உத்தரவிடலாம் எனவும் தீர்மானிக்கப்படுகிறது.

இறுதியாக, எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 294(பி)–ன் படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என்று முடிவு செய்து எதிரி மேற்கண்ட குற்றச்சாட்டிலிருந்து குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 248(1)–ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. மேலும், இந்திய தண்டனை சட்டம் பிரிவு 324 குற்றசாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என முடிவு செய்து எதிரிக்கு இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 324–ன் கீழான் குற்றத்திற்கு ரூ.10,000/– அபராதம் மட்டும் விதித்து, அபராதம் செலுத்ததவறினால் ஒரு மாதம் மெய்க்காவல் சிறை தண்டனையும் விதித்து குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 248(2)ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

எதிரி செலுத்த வேண்டிய அபராதத் தொகைகளில் ரூ.5000/–த்தை பாதிக்கப்பட்ட அ.சா.1 க்கு இழப்பீடாக வழங்கவேண்டுமென குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 357 ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட பி.நம்பர். 19/2024–ல்

05.11.2024 ம் தேதி உள்ள சா.பொ.1 சிறிய சிமெண்ட் கல் ஒன்றை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, மீண்டும் என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு ஜூலை மாதம் 29-ம் நாளான இன்று என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KALIYAMOORTHY BAKKIARAJ

Digitally signed by KALIYAMOORTHY BAKKIARAJ
Date: 2026.07.29 18:55:09 +0530

15 வது பெருநகர குற்றவியல் நடுவர்/நீதித்துறை நடுவர்,
ஜார்ஜ்டவுண், சென்னை-01.

இணைப்பு

<u>அரசு தரப்பு சாட்சிகள் :</u>

| | | |
|---|---|---|
| 1. | அ.சா.1 | திரு. முத்துப்பெருமாள் |
| 2. | அ.சா.2 | திரு. நகேந்திரன் |
| 3. | அ.சா.3 | திரு. கர்ணன் |
| 4. | அ.சா.4 | திரு. பிரபு |
| 5. | அ.சா.5 | திரு. கோதண்டராமன் |
| 6. | அ.சா.6 | திரு. பானு |
| 7. | அ.சா.7 | திரு. வீரலட்சுமி (மருத்துவர்) |
| 8. | அ.சா.8 | திரு. ஸ்ரீவித்யா (மருத்துவர்) |
| 9. | அ.சா.9 | திரு. பழனிசாமி (காவல் உதவி ஆய்வாளர்) |

அரசு தரப்பு சான்றாவணங்கள் :

| No. | Exhibit No. | Description of the Exhibit | Proved by/ Attested by |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 19.10.2023 புகார் | PW1 |

| | | | |
|---|---|---|---|
| 2. | அ.சா.ஆ.2 | 19.10.2023 பார்வை மகஜர் | PW5 |
| 3. | அ.சா.ஆ.3 | 19.10.2023 கைப்பற்றுதல் மகஜர் | PW5 |
| 4. | அ.சா.ஆ.4 | 19.10.2023 விபத்து பதிவேடு நகல் | PW7 |
| 5. | அ.சா.ஆ.5 | 19.10.2023 காயச்சான்று | PW8 |
| 6. | அ.சா.ஆ.6 | 19.10.2023 முதல் தகவல் அறிக்கை | PW9 |
| 7. | அ.சா.ஆ.7 | 19.10.2023 மாதிரி வரைபடம் | PW9 |

எதிரி  தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : ஏதுமில்லை.

சான்று பொருள் –: இல்லை.

| | | | |
|---|---|---|---|
| 1. | சா.பொ.1 | கல் ஒன்று. | PW5 |

குறிப்பு :

1. எதிரி காவல் நிலைய பிணையில் உள்ளார்.

2. சாட்சிகள் யாரும் 3 வாய்தாக்களுக்கு மேல் அழைக்கப்படவில்லை.

3. தீர்ப்புரை குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

KALIYAMOORTHY BAKKIARAJ

Digitally signed by KALIYAMOORTHY BAKKIARAJ
Date: 2026.07.29 18:55:14 +0530

15 வது  பெருநகர குற்றவியல் நடுவர்/நீதித்துறை நடுவர்,
ஜார்ஜ்டவுண், சென்னை–01.